சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 96/2021

பெயர். திரு.நாகலிங்கம் நாள். 28.04.2026
த/பெ. சுப்பிரமணி

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1) என்னுடைய ஓட்டுநர் உரிமம் நகல் **எ.ம.த.சா.ஆ.1**. என்னுடைய வாகனத்தின் புகைப்படங்கள் **எ.ம.த.சா.ஆ.2**. கொரோனா தொற்று காலத்தில் மத்திய அரசு வழங்கிய அறிவிப்புகள் **எ.ம.த.சா.ஆ.3 மற்றும் 4**. தகவல் அறியும் நான் அளித்த விண்ணப்பம் நகல் **எ.ம.த.சா.ஆ.5**. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 2ம் எதிர் மனுதாரர் நிறுவனத்தில் என் வாகனம் விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். விபத்து காலத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். நான் எனக்கு வாகனத்தை அதிவேகமாகவும் அஜாகிரதையாகவும் ஓட்டி வந்து சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தவர் மீது மோதிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. குற்றவழக்கில் என்மீது குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. என்னுடைய அதிவேகம் மற்றும் அஜாகிருதையால் விபத்தை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நானும், 2ம் எதிர்மனுதாரரும் தான் மனுதாரருக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எனவே, மனு அனுமதிக்கப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 15.07.2021 அன்று விபத்து ஏற்ப்பட்டது. அன்றைய தேதியில் என்னுடைய ஓட்டுநர் உரிம்ம புதுப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். எனவே விபத்து காலத்தில் எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எ.ம.த.சா.ஆ.3 மற்றும் 4 தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்டது என்றால் சரிதான். விபத்து காலத்தில் எனக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் மனுதாரருக்கு நான் தான் இழப்பீடு தரக்கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குற்றவியல் நீதிமன்றங்களில் என் மீது குற்றவழக்கு ஏதும் நிலுவையில் இல்லை.

2) குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால் யார் மீது தவறு என்று தெரியவரும் என்று சொன்னால் சரிதான். 2ம் எதிர் மனுதாரர் மனுதாரருக்கு எவ்வித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.